மாகாணத் திறைசேரி - வடமாகாணம்
Provincial Treasury – Northern Province
පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

My No:-NP/09/FRM/ 2011 Date:- 25.07.2011

மாகாணத் திறைசேரி சுற்று நிருப இல:- PT/07/2011

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**"தயட்ட கிருள"(Deyata Kirula) தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் பங்குபற்றிய அலுவலர்களிற்கான படிகளின் கொடுப்பனவு**

மேற்படி விடயம் தொடர்பாக 10/2011ம் இலக்கமும், **26.05.2011**ம் திகதியும் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011 தேசிய சுதந்திர தினத்திற்கு ஒருங்கிசைவாக நடாத்தப்பட்ட தேசிய அபிவிருத்தி குறித்த "தயட்ட கிருள"கண்காட்சிக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட, மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு உரித்துடையவரல்லாத அலுவலர்களிற்கு இணைந்த படிக்குச் சமனான மேலதிக விசேட கொடுப்பனவொன்றினை பின்வரும் அடிப்படையில் வழங்குவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

1. அரச செலவில் இருப்பிடம், உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டதன் காரணமாக இணைந்த படியினைப் பெறாத அலுவலர்களிற்கு இவ் விசேடபடியானது வழங்கப்படமுடியும்.

2. அரச செலவில் இருப்பிடம், உணவு மற்றும் சிற்றுண்டிகள் வழங்கப்படாததன் காரணமாக இணைந்த படியினைப் பெற்றுக்கொண்ட அலுவலர்களிற்கு இவ் விசேடபடியானது வழங்கப்படமுடியும்.

3. மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு உரித்துடைய அலுவலர்களிற்கு இவ்விசேட படி வழங்கப்படமுடியாது. இருப்பினும் தாபன விதிக்கோவைக்கமைவாக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படலாம்.

4. 2011.01.27ம் திகதியிலிருந்து 2011.02.11ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அலுவலர்கள் தமது அலுவலக நேரத்தைவிட மேலதிகமாகக் கண்காட்சிக் கடமைகளை நிறைவேற்றிய நாட்களின் எண்ணிக்கைக்கு இந்த விசேட படியானது வழங்கப்படமுடியும்.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி,
பிரதம செயலாளருக்காக,
வட மாகாணம்.

பிரதிகள்:-
1. கௌரவ ஆளுனரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொது நிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர் - மாகாணக் கணக்காய்வு – வ.மா

(தகவலுக்காக)



79/2, Rakka Road, Chunddukuli, Jaffna
Phone No. DCS(F) Direct 021-2220850 Fax 021-2220853 General No - 021-2220854
E-Mail - npptreasury@gmail.com

அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 10/2011

எனது இல: EST/8/ALLOW/03/144/2
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2011.05.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

**"தயட கிருள" தேசிய அபிவிருத்தி கண்காட்சியில் பங்குபற்றிய**

**உத்தியோகத்தர்களுக்கான படிகளின் கொடுப்பனவு**

2011 தேசிய சுதந்திர தினத்திற்கு ஒருங்கிசைவாக நடாத்தப்பட்ட தேசிய அபிவிருத்தி குறித்த தயடகிருள கண்காட்சியின் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்காக உரித்துடையவராக்கப்படாத உத்தியோகத்தர்களுக்கு இணைந்த படிகளுக்குச் சமனான மேலதிக விசேட கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கு அங்கீகாரமானது இத்தால் வழங்கப்பட்டுள்ளது.

02. அரசாங்கத்தின் செலவினங்களில் இருப்பிடம், உணவு மற்றும் பானங்களின் ஏற்பாடுகள் காரணமாக இணைந்த படியினைப் பெறாத உத்தியோகத்தர்கள் அத்துடன் மேற்படி வசதிவாய்ப்புக்கள் வழங்கப்படாததன் காரணமாக இணைந்த படி வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் ஆகிய இருதரப்பினர்களுக்கும் இந்த விசேட படியானது வழங்கப்பட முடியும்.

03. இருந்தபொழுதும், மேலதிக நேரக் கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இந்த விசேட படிகளுக்கு உரித்துடையவராக்கப்படாததுடன் இருக்கும் ஏற்பாடுகளின்படி மேலதிக நேரப்படி வழங்கலாம்.

04. 2011.01.27 ஆம் திகதியில் இருந்து 2011.02.11 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் உத்தியோகத்தர்கள் அலுவலக நேரத்தினைவிட மேலதிகமாகக் கண்காட்சி மீதான கடமைகளை நிறைவேற்றிய நாள்களின் எண்ணிக்கைக்காக இந்த விசேட படியானது வழங்கப்படமுடியும்.

05. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.